# Indian Polity Notes Part 17 in Tamil

## 17. மத்திய மற்றும் மாநில அரசுகளின் கீழான பணிகள்

### (பகுதி – XIV) (சரத்துக்கள்: 308 – 323)

- இப்பகுதியில் மாநிலம் என்பது ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை உள்ளடக்காது. (சரத்து – 308).

**சரத்து - 309**

- மத்திய அரசு தொடர்புடைய பொதுப்பணிகள் மற்றும் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்களுக்கு, பணி நியமனம், நிபந்தனைகள் தொடர்பாக நாடாளுமன்றம் சட்டம் இயற்றி ஒழுங்குபடுத்தலாம். அவ்வாறு சட்டம் இயற்றும் வரை குடியரசுத் தலைவர் ஏவுரைகளை வழங்க வேண்டும்
- மாநில அரசு தொடர்புடைய பொதுப்பணிகள் மற்றும் பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு, பணி நியமனம், நிபந்தனைகள் தொடர்பாக சட்டமன்றம் சட்டம் இயற்றி ஒழுங்குபடுத்தலாம்.
அவ்வாறு சட்டம் இயற்றும் வரை ஆளுநர் ஏவுரைகளை வழங்க வேண்டும்.

**சரத்து - 310**

மத்திய அரசின் ராணுவ பணி அல்லது குடிமைப் பணியில் உள்ள ஒவ்வொரு நபரும் அனைத்திந்திய பணி அல்லது ராணுவப் பணியுடன் இணைந்த பதவி குடியரசுத் தலைவர் விரும்பும் வரை பதவியில் இருக்கலாம்.

மாநில அரசின்கீழ் குடிமைப் பணியில் உள்ள ஒவ்வொரு நபரும் ஆளுநர் விரும்பும் வரை பதவியில் இருக்கலாம்,

- ஒரு அரசு ஊழியரை நியமனம் செய்த அதிகாரிக்கு கீழ் உள்ள அதிகாரியினால் பதவி நீக்கம் செய்யப்படக் கூடாது. (சரத்து – 311)
- எந்த ஒரு அரசு ஊழியரும் தான் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு அல்லது பதவிக் குறைப்பு செய்யப்படுவதற்கு முன்பாக அவரின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணையில் தன்னுடைய வாதத்தினை எடுத்துக் கூற ஒரு நியாமான சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். (ஆனால் ஒழுக்கக் கேடு, சந்தர்ப்பம் அளிக்க சாத்தியமில்லாத போது, நாட்டின் பாதுகாப்பு கருதினால் நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்பட தேவையில்லை)

**சரத்து – 312**

- அனைத்திந்திய அரசுப் பணிகள் உருவாக்கவும், ஒழுங்குபடுத்தவும் நாடாளுமன்றத்திடம் அதிகாரம் உள்ளது.

- அனைத்திந்திய அரசுப் பணிகள் உருவாக்க மாநிலங்களவையின் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறைவில்லாத உறுப்பினர்கள் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.
- "அனைத்திந்திய நீதிப்பணி" : 42 – வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தினால் நமது இந்திய அரசியலமைப்பில் புதிதாக சேர்க்கப்பட்டது,
- "அனைத்திந்திய நீதிப்பணி" என்பது மாவட்ட நீதிபதி பதவிக்கு கீழ் உள்ள பதவியை உள்ளடக்காது.

**சரத்து – 312A**

சில அரசுப் பணிகளில் உள்ள அதிகாரிகளின் பணி தொடர்பான, ஊதியம், விடுமுறை, ஓய்வூதியம், ஒழுங்குதுமுறை நடவடிக்கைகளின்போது உள்ள உரிமைகள், ஆகியவைகளை பின் தேதியிட்டு அல்லது முன்தேதியிட்டு மாறுபாடு செய்ய அல்லது திரும்பப் பெற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

**(28வது திருத்தச் சட்டம் 1972க்கு பிறகு)**

ஆனால், இந்திய தலைமை நீதிபதி, உச்சநீதிமன்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள். இந்தியத் தலைமை கணக்காயர் மற்றும் தணிக்கைத் தலைவர் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநில தேர்தல் தலைவர், தலைமைத் தேர்தல் ஆணையாளர் பதவி வகிப்பவர்களுக்கு பணி நியமனத்திற்குப் பிறகு ஊதியம் மற்றும் பிற உரிமைகளை குறைக்கக் கூடாது.

**மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**(சரத்து – 315)**

- மத்திய அரசிற்கு ஒரு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருத்தல் வேண்டும்.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவாக ஒரே அரசுப்பணியாளர் தேர்வாணையம் இருந்தால் அது கூட்டு தேர்வணையம் (Joint Commission) எனப்படும். இதனை அமைப்பது நாடாளுமன்றம் ஆகும்.

அவ்வாறு அமைக்க அந்த மாநிலங்கள் தங்கள் சட்டமன்ற அவைகளில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையமானது மாநில ஆளுநரின் வேண்டுகோளின்படி, குடியரசுத் தலைவரின் முன் அனுமதி பெற்று அம்மாநிலத்திற்கு அரசுப் பணியாளர் தேர்வாணையமாக செயல்படலாம்.

**நியமனம் மற்றும் பதவிக்காலம் (சரத்து – 316)**

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின், கூட்டு தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களையும் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

- தேர்வாணையத்தின் உறுப்பினர்களில் கிட்டத்தட்ட ஒரு பகுதியினர் (One-half) மத்திய அல்லது மாநில அரசின் கீழ் குறைந்து 10 ஆண்டுகள் அரசுப் பதவி ஏற்று இருந்நதவர்களாக இருக்க வேண்டும்.
- தேர்வாணயத்தின் தலைவர் பதவி காலியாக இருக்கும்போது அல்லது வருகை தராமல் இருக்கும்போது அல்லது அலுவலக பணியாற்ற இயலாத போது, ஆணையத்தின் உறுப்பினர்களில் ஒருவரை தலைவராக செயல்பட குடியரசுத் தலைவர் நியமிக்கலாம்.
- உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை எது முதலில் நிறைவேறுகிறதோ அதன்படி பதவியில் இருக்கலாம்.
- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் அல்லது கூட்டுத் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகல் கடிதத்தை குடியரசுத் தலைவரிடம் அளிக்க வேண்டும்.
- பதவிக்காலம் முடிந்த உறுப்பினர்கள் மீண்டும் அப்பதவிக்கு தேந்தெடுக்கப்படத் தகுதியற்றவர்கள். மேலும் அவர்கள் மத்திய அல்லது மாநில அரசின் கீழ் எப்பணியில் அமர்வதற்கும் தகுதியற்றவர்கள்.

**பதவி நீக்கம், இடைநீக்கம் (சரத்து – 317)**

- உறுப்பினர் ஒருவரை பதவிநீக்கம் செய்ய வேண்டுமெனில் நிருபிக்கப்பட்ட தீயநடத்தை காரணமாக உச்சநீதிமன்ற அறிவிக்கையின்படி (report) குடியரசுத் தலைவர் பதவி நீக்கம் செய்யலாம். இவ்வாறு, உச்சநீதிமன்ற அறிவிக்கை வரும்வரை அவ்வுறுப்பினரை இடைநீக்கம் செய்யலாம்.
- நொடிப்பு நிலை, பதவிக் காலத்தில் வேறு ஏதேனும் ஊதியம் பெறும் வேலை, உடல் அல்லது உள்ள தளர்ச்சியுடையவராக குடியரசுத் தலைவர் கருதினால் உச்சநீதிமன்றத்திற்கு சுட்டி அனுப்பாமலேயே உத்தரவு மூலமாக குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கலாம்.
- தலைவர் அல்லது உறுப்பினர் எவரேனும் அரசு சார்பான ஒப்பந்தங்களில் தங்களுக்கு இலாபம் வரும் நோக்குடன் பங்கொடுத்து கொண்டால் அவர் தீய நடத்தைக் குற்றம் புரிந்தவராக கருதப்படுவார்.

**மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இருத்தல் வேண்டும் (சரத்து – 315)

**நியமனம் மற்றும் பதவிக்காலம் (சரத்து – 316)**

- மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை அம்மாநிலத்தின் ஆளுநர் நியமனம் செய்வார்.

- தேர்வாணையத்தின் உறுப்பினர்களில் கிட்டத்தட்ட ஒரு பகுதியினர் (One-half) மத்திய அல்லது மாநில அரசின் கீழ் குறைந்தது 10 ஆண்டுகள் அரசுப் பதவி ஏற்று இருந்தவர்களாக இருக்க வேண்டும்.
- தேர்வாணயத்தின் தலைவர் பதவி காலியாக இருக்கும்போது அல்லது வருகை தராமல் இருக்கும்போது அல்லது அலுவலக பணியாற்ற இயலாத போது, ஆணையத்தின் உறுப்பினர்களின் ஒருவரை தலைவராக செயல்பட ஆளுநர் நியமிக்கலாம்.
- உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை எது முதலில் நிறைவேறுகிறதோ அதன்படி பதவியில் இருக்கலாம்.
- மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினர் ஒருவர் பதவி வலகல் கடிதத்தை அம்மாநிலத்தின் ஆளுநரிடம் அளிக்க வேண்டும்.
- பதவிக்காலம் முடிந்த உறுப்பினர்கள் மீண்டும் அப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டத் தகுதியற்றவர்கள்,மேலும் அவர்கள் மத்திய அல்லது மாநில அரசின் கீழ் எப்பணியில் அமர்வதற்கும் தகுதியற்றவர்கள்.

**பதவி நீக்கம், இடைநீக்கம் (சரத்து – 317)**

- உறுப்பினர் ஒருவரை பதவி நீக்கம் செய்ய வெண்டுமெனில் நிருபிக்கப்பட்ட தீயநடத்தை காரணமாக உச்சநீதிமன்ற அறிக்கை (report) யின்படி குடியரசுத் தலைவர் பகவி நீக்கம் செய்யலாம்.
- இவ்வாறு, உச்சநீதிமன்றம் அறிவிக்கை வரும்வரை அவ்வுறுப்பினரை ஆளுநர் இடைநீக்கம் செய்யலாம்.
- நொடிப்பு நிலை, பதவிக் காலத்தில் வேறு ஏதேனும் ஊதியம் பெறும் வேலை, உடல் அல்லது உள்ள தளர்ச்சியுடையவராக குடியரசுத் தலைவர் கருதினால் உச்சநீதிமன்றத்திற்கு சுட்டி அனுப்பாமலே உத்தரவு மூலமாக குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கலாம்.
- தலைவர் அல்லது உறுப்பினர் எவரேனும் அரசு சார்பான ஒப்பந்தங்களில் தங்களுக்கு இலாபம் வரும் நோக்குடன் பங்கெடுத்துக் கொண்டால் அவர் தீய நடத்தைக் குற்றம் புரிந்தவராக கருதப்படுவார்.

**சரத்து – 318**

- மத்திய அரசுத் தேர்வாணையம் அல்லது கூட்டு ஆணையம் எனில் குடியரசுத் தலைவர் உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பணி நிலைமைகளை நிர்ணயிக்கலாம், ஆனால் , பணி நியமனத்திற்குப் பறகு பாதகமாக மாறுபாடு செய்யக்கூடாது.
- மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் நிலைமைகளை ஆளுநர் நிர்ணயிக்கலாம், ஆனால், பணி நியமனத்திற்குப் பறகு பாதகமாக மாறுபாடு செய்யக்கூடாது.

**தேர்வாணைய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் பணி மூப்பிற்கு பின் (சரத்து – 319)**

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், மத்திய, மாநில அரசின் எப்பணியில் அமர்வதற்கும் தகுதியற்றவர் ஆவார்.
- மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர், வேறு மாநில தேர்வாணையத் தலைவராகவே, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர் அல்லது தலைவராகவோ நியமிக்க தகுதியுடையவர்.
- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினர் அதன் தலைவராகவோ அல்லது வேறு மாநிலத் தேர்வாணையத்தின் தலைவராகவோ நியமிக்கத் தகுதியுடையவர்.
- மாநில தேர்வாணையத்தின் உறுப்பினர், அத்தேர்வாணையத் தலைவராகவோ, வேறு மாநிலத் தேர்வாணையத் தலைவராகவோ, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் அல்லது உறுப்பினராகவோ நியமிக்க தகுதியுடையவர்.

**தேர்வாணையத்தின் பணிகள் (சரத்து – 320)**

- மத்திய மற்றும் மாநில அரசுப் பணிகளுக்கு நியமிக்க தேர்வுகளை நடத்த வேண்டும்.
- மாநில அரசுகளின் பணிகளுக்கு தக்கவர்களை அமர்த்த தேர்வகள் நடத்துவது.
- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் கேட்டுக் கொண்டால், தேர்வாளர்களுக்கு தேவையான சிறப்புத் தகுதிகள் கூட்டு பணிநியமனத்திற்கு தேவையான செயல்முறைத் திட்டம் மற்றும் வடிவமைப்பிற்கு உதவ வேண்டும்.

**ஆலோசனை செய்ய வேண்டிய தருணங்கள் (சரத்து – 320)**

1. அரசுப் பணிகளுக்கென ஆள் தேர்வு செய்வதற்குண்டான முறை குறித்த விசயங்களின் இவ்வாணையத்தை ஆலோசிக்க வேண்டும்.
2. பணியமர்த்தல், பதவி உயர்வுகள் பணி மாற்றங்கள் போன்றவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள்.
3. ஒழுங்கு நடவடிக்கை குறித்த விசயங்கள்.
4. கடமையை செய்யும் செயல் குறித்த நடவடிக்கைகளை எதிர்த்து வழக்காடிய வகையில் தன்னால் செய்யப்பட்ட செலவுகளை அரசிடம் திரும்பப் பெறவேண்டி அரசுப் பணியாளர் செய்யும் கோரிக்கைகள்.
5. அரசிற்கு பணியாற்றும் பொழுது ஏற்பட்ட ஊறுகளுக்கு இழப்பீடு கேட்டு செய்யப்படும் கோரிக்கைகள்.
6. மேற்கண்ட அனைத்து விசயங்களிலும் ஆலோசனை வழங்குவது சம்மந்தப்பட்ட தேர்வாணையத்தின் கடமையாகும்.

- பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்களுக்கு அரசுப் பணியில் இட ஒதுக்கீடு செய்யும் விசயங்களின் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை.
- குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரால் உருவாக்கப்பட்ட கட்டுப்பாடுகள் 14 நாட்களுக்கு குறைவில்லாமல் நாடாளுமன்றத்தின் அவைகளின் அல்லது சட்டமன்ற அவைகளின் தாக்கல் செய்ய வேண்டும்.

**தேர்வாணையத்தின் கூடுதல் பணிகள் (சரத்து – 321)**

- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கூடுதல் பணிகளை ஒதுக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது
- மாநில தேர்வாணையத்திற்கு கூடுதல் பணிகளை ஒதுக்கும் அதிகாரம் சட்டமன்றத்திடம் உள்ளது.

**தேர்வாணையத்தின் செலவுகள் (சரத்து – 322)**

- மத்திய தேர்வாணையத்தின் ஊதியம், படிகள், ஓய்வூதியம் உள்ளிட்ட செலவுகள் அனைத்து ஓட்டெடுப்பிற்கு உட்படாத இந்திய தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும்.
- மாநில தேர்வாணையத்தின் ஊதியம், படிகள், ஓய்வூதியம் உள்ளிட்ட செலவுகள் அனைத்து ஓட்டெடுப்பிற்கு உட்படாத மாநில தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும்.

**வருடாந்திர அறிக்கை (சரத்து – 323)**

- மத்திய தேர்வாணையம் (report) வருடாந்திர அறிக்கையினை குடியரசுத் தலைவரிடம் சமர்பிக்கும் அவர் அதனை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமர்ப்பிப்பார்.
- மாநில தேர்வாணையம் வருடாந்திர அறிக்கையினை ஆளுநரிடம் சமர்ப்பிக்கும். அதை அவர் சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பார்.
- கூட்டுத் தேர்வாணையம் வருடாந்திர அறிக்கையினை அந்தந்த ஆளுநரிடம் சமர்ப்பிக்கும், அந்த அறிக்கை கூட்டு நகலை அந்த ஆளுநர் சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பார்.